

சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்–அமைச்சர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின் ஆய்வு கூட்டம் நேற்று நடைபெற்ற போது எடுத்த படம். இந்த கூட்டத்தில் துணை முதல்–அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் பங்கேற்றனர்.

# வெளிநாடுகளில் இருப்பது போல் தமிழகத்தில் உள்கட்டமைப்பு வசதி

## அரசு அதிகாரிகளுக்கு, முதல்–அமைச்சர் உத்தரவு

சென்னை, செப்.19– வெளிநாட்டில் இருப்பது போல் தமிழகத்தில் உள் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என்று அரசு அதிகாரிகளுக்கு, முதல்–அமைச்சர் எடப்பாடி பழனிசாமி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது:–

### உயர்தரமிக்க உள்கட்டமைப்புகள்

முதல்–அமைச்சர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின் ஆய்வுக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

இந்த கூட்டத்தில், வெளிநாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது, அங்கு பார்வையிட்ட கட்டமைப்புகளை பற்றி விவாதித்ததுடன், அது போன்ற உயர்தரமிக்க உள்கட்டமைப்புகளை தமிழ்நாட்டில் ஏற்படுத்துவதன் அவசியம் குறித்து முதல்–அமைச்சர் எடுத்துரைத்தார். இதன்மூலம், அதிக முதலீடுகளை உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு ஈர்த்து, வேலைவாய்ப்பை பெருக்க அறிவுரை வழங்கினார்.

### என்னென்ன கட்டமைப்பு?

தமிழ்நாட்டில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டமைப்பு திட்டங்களான, சென்னை நிதி தொழில்நுட்ப நகரம், தமிழ்நாடு ஒருங்கிணைந்த சுற்றுலா வளர்ச்சித் திட்டம், சென்னை ஒருங்கிணைந்த வாகன நிறுத்துமிட மேலாண்மை திட்டம், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழக பேருந்து பணிமனைகளை நவீனப்படுத்தும் திட்டம், சென்னை இலகு ரெயில் பயணத்திட்டம், வெளி வட்டச் சாலை – தொழில் மேம்பாட்டுத் திட்டம், கடல் அருங்காட்சியகம் அமைத்தல்,

அறிவியல் நகரத்தில் 'விர்சுவல் ரியாலிட்டி' என்ற தொழில்நுட்பம் மூலம் அறிவுசார் காட்சியகம் அமைத்தல், எம்.ஜி.ஆர். திரைப்பட நகரத்தில் 'விர்சுவல் ரியாலிட்டி' தொழில்நுட்பத்தில் பொழுதுபோக்கு காட்சியகம் அமைத்தல், மெடிபார்க் அமைத்தல் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

### தொழில் வழித்தடம்

சென்னை – கன்னியாகுமரி தொழில் வழித்தடத் திட்டம், பொன்னேரி மையத்தில் சென்னை – பெங்களூரு தொழில் வழித்தடத் திட்டம், நடந்தாய் வாழி காவிரி திட்டம், கோயம்புத்தூர், ஈரோடு, சேலம், திருச்சி மற்றும் திருப்பூர் மாநகராட்சிகளில் கழிவு நீர் மறுசுழற்சி செய்யும் திட்டங்கள், சென்னையில் உள்ள நீர்வழித் தடங்களை மீட்டெடுக்க ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம்,

சென்னையில் கழிவுநீரை மறுசுழற்சி செய்யும் திட்டம், தூத்துக்குடி மாவட்டம், முள்ளக்காடு கிராமத்தில் கடல் நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல், ராமநாதபுரம் மாவட்டம், குதிரைமொழி கிராமத்தில் கடல்நீரை குடிநீராக்கும் திட்டம், விழுப்புரம் மற்றும் திண்டிவனம் பகுதிகளுக்கு குடிநீர் வழங்க கடல்நீரை குடிநீராக்கும் திட்டம், ஆகிய திட்டங்களுக்கான செயல்திட்டம் குறித்து முதல்–அமைச்சர் ஆய்வு செய்தார்.

### விரைவில்...

மேலும், இந்த திட்டங்களை விரைவில் செயல்படுத்த உரிய நடவடிக்கைகளை எடுக்க சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு முதல்–அமைச்சர் அறிவுரைகள் வழங்கினார்.

இத்திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம், கூடுதல் முதலீடுகள் ஈக்கப்படுவதுடன், கூடுதல் வேலைவாய்ப்பும் ஏற்படும். மேற்கூறப்பட்ட திட்டங்களுக்கான திட்ட அறிக்கைகள் தயாரிப்பதற்கென தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்திற்கு 289 கோடியே 82 லட்சம் ரூபாய் நிதி அனுமதிக்கப்பட்டது.

இந்த கூட்டத்தில் துணை முதல்–அமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் மற்றும் அமைச்சர்கள், தலைமைச் செயலாளர் க.சண்முகம், உயர் அதிகாரிகள் பங்கேற்றனர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.